2008 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதையே இந்த அவையின் சார்பாகப் பாராட்டுவதாக எடுத்துக்கொண்டு, அடுத்த அலுவலுக்குச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

(இ) வாகனங்களில் சுழலும் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன திரு. ஞானசேகரன், என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கு முந்தைய நாள் தங்களிடம் வந்து, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள் எல்லாம் சிவப்பு விளக்கினைப் போட்டுக்கொண்டு போய்க்கொண்டுள்ளனர் என்ற ஒரு கருத்தைக் கொண்டு வந்தேன். யார், யாரெல்லாம் சிவப்பு விளக்கைத் தங்களுடைய காரில் பொருத்திக்கொண்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். போய்ப் பாருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், என்ன? (குறுக்கீடுகள்) மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். அதை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்கெனவே இங்கு தெரிவித்ததைப்போல், இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டியிருக்கின்ற சூழ்நிலையில், மற்ற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், நாளை முதல் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை எடுப்பதற்கான (குறுக்கீடுகள்) தயவுசெய்து இன்று நடைபெறவிருக்கின்ற இரண்டு மானியங்களை நிறைவேற்றித் தருவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றதெல்லாம் Monday எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) திங்கட்கிழமை எடுத்துக்கொள்வோம். நேரம் இல்லை. இரண்டு மானியங்கள் இருக்கின்றன. (Interruption) No. No. We have no time. please sit down.

4. கவன ஈர்ப்பு

தளி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி, சாலை வசதி ஏற்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. செங்குட்டுவன் மற்றும் திரு. டி. இராமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், யார் முதலில் கொடுத்தது? (குறுக்கீடுகள்) முதலில் திரு. டி. செங்குட்டுவன் கொடுத்திருக்கிறார். திரு. செங்குட்டுவன். ஒரே சப்ஜெக்ட். (குறுக்கீடுகள்) திரு. செங்குட்டுவன், அவர் பேசட்டுமா? சரி. (குறுக்கீடுகள்) சரி, திரு. டி. இராமச்சந்திரன், பேசுங்கள்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சிக்குத் தமிழக எல்லைக்குள் சாலை வசதி ஏற்படுத்தவும் மற்றும் மஞ்சுகொண்டபள்ளி, பேல்பட்டி இடையே தார்ச் சாலை அமைக்கவும் வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தளி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி கிராமம் வரை வாகனங்கள் சென்று வரும் நிலையில் கீழ்க்காண் மண் சாலை வசதிகள் உள்ளன.